உ

சிவமயம்.

முசிரி
விசுவேசர்மாலை
விசாலாட்சியம்மை பதிகம்.
ஆறுமுகக்கடவுள் பதிகம்



இவை

முசிரியிலிருக்கும் தி. இராமசாமி பிள்ளையவர்கள் குமாரர்

ஸ்ரீமான். குமாரசாமிபிள்ளையவர்கள்

கேட்டுக்கொண்டபடி



ஷை யூரிலிருக்கும் கு. அப்பாவுபிள்ளையவர்கள் குமாரர்

வித்வான். ஆறுமுகம்பிள்ளையவர்களால்

இயற்றப்பட்டு



ஷை யூரிலிருக்கும், மருதபிள்ளையவர்கள் குமாரர்,

ஸ்ரீமான் சங்கிலிபிள்ளையவர்களால்



குளித்தலை K. மதுரைநாயகம்பிள்ளையவர்களது

ஸ்ரீ அம்பிகைவிலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

May 1912





சிவமயம்.

சாற்றுகவிகள்

ஸ்ரீரங்கம் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

பிரம்மஸ்ரீ. குரு. சுப்பிரமணியஐயரவர்கள்

இயற்றியவை.

சீர்பூத்த மணிமாலை யணிமுலையார் முகமதனைத் திங்க ளென்றே, நீர்பூத்த செவ்வாம்பல் பகலினுநகங் கலர்முசிறி நிலையம்வாழ்ந்து, பார்பூத்த வடியவர்களும் பண்ணவர்க்குந் திருவருளைப் பாலித்தாளுங், கார்பூத்த விமயமலைக் கன்னிபுணர் விசுவேசக் கடவுண்மீது.

செந்தமிழின் மணமுஞ்செறியத் திகழுந்திருநன் மாலை யொன்று செய்தியென்றே, சுந்தரவேளரிகர்குமர சாமி வள்ள னினிகேட்பத் தொடுத்தீந்தானு, விந்தவுல கவர் புகழ விலக்கணவி லக்கியங்கள் யாவுங்கற்றுக், கந்தனரவி ந்தபதனு சிந்தனைசெய் யாறுமுகக் கவிஞரோரே.

மதுரைத் தமிழ்ச் சங்கத்து மகாவித்துவான்

சித்தாந்தசரபம், அஷ்டாவதானம்

பூவை கலியாணசுந்திர முதலியாரவர்கள்

இயற்றியவை.

பன்னிரு சீர்க்கழி நெடில் விருத்தம்.

உத்தமகுணத்தினனு யோங்கியராமசாமி யொண்டவ த்தி, லுதித்துயர்கு மாரசாமிக்கோமா னன்புடனே யுவந் துவேண்ட, பத்தியருபத்தமா விலக்கியவி லக்கணநூற் ப லவுந்தேர்ந்த, பாவலர் சிகாமணியா மாறுமுகவிற்பன்ன ன் பார்வியக்கத், தொத்தலர்பூந் துடவைசூழ்செறி முசிறிமா

நகரதனிற் றுலங்கிநின்ற, தாயவிசு வேசர் மீதொருமாலை நயமுறநற் சுகமாச்சொற்றான், இத்தரையி லவ்வரிய நூனிலவ மருதப்ப வெழின் மேதாவி, யீன்றசற் புத்திரன் சங் கிலிவள்ள லச்சிட்டிங் கீந்தான்மாதோ.

ஸ்ரீ

வீ. அப்பாய்நாயுடு என்னும்

வெங்கிடரங்க நாயுடுவினால்

இயற்றியவை.

பொன்பூத்த பொன்னியின்றன் புனற்பெருக்கானாடோறு
மன்பூத்த பல்வளமு மல்கியிர வலர்மகிழக்
கொன்பூத்த நன்மாந்தர் கொடுத்துவக்குங் காரணத்தால்
தென்பூத்த கடலுலகிற் சிறந்தசென்னி நன்னாட்டில். (1)

|த
சீர்விரும்புநால்வகையாய்த் திகழ்வுறுசெம் பொன்மணித்
வேர்விரும்பு மணிமாடத் தேந்திழையார் தீந்தமிழ்ப்பாக்
கார்விரும்பும் விண்ணாட்டுக் கன்னியர்க ளேக்கறுப்ப
பார்விரும்பும் யாழ்கொடுநற் பண்பாடு முசிறியினில். (2)

விண்ணணவு மார்த்தாண்டன் விழிகூச விளங்கிடுமிம்
மண்ணணவு மந்திரத்தின் மலைமடந்தை யோடமரொங்
கண்ணணவும் விசுவேசர் கழன்மலர்ச்சே வடிமீது
பண்ணணவுந் தமிழ்மாலை பாடியருளுகவென்றே (3)

கலம்வளரு முலைமடவார் கவின்மொழிக்கு மனமுடைந்தே
பலம்வளரும் பூம்பொழிலிற் பைங்கிளிபூ வையுமுறையுந்
தலம்வளரு வளமைசெறி தான்றோன்றி தனில்வேளாண்
குலம்வளரும் படியுதித்தோன் குணராமசாமிசுதன் (4)

பூமேவுமடியார்க்குப் போனகந்தந் துளமுவக்கு
கோமேவு நல்லிளையான் குடிமாறன் றனையேய்ப்ப
மாமேவுமறுசுவைகண் மலிந்தவினி தமுதூட்டுந்
தாமேவு மகமுடையான் சொல்லருநற் புகழுடையான்(5)

வளம்விழையு நீர்ச்சாலை வைத்தேவப் பூதிநிக [முழுங்
ருளம்விழையுங் கருணையோடிங குவந்தளிப்போன் மதுர
குளம்விழையு மின்சொல்லன் குறமகளை மணந்தொளிருந்
தளம்விழையுங்கடம்பணியுஞ் சாமிபதமுளம்பதிப்போன்.

இருண்மருவும் பிறவியினி லினியடையா வணமன்பாய்
தெருண்மருவுந்திருத்தளியைச் செய்துவிநாயகனென்னும்
பொருண்மருவு மறைபுகழும் பூரணனைப் பொருந்தவைத்
[தோன்
சுருண்மருவுஞ் செங்குவளைத் தொடையலணி தடந்தோ
[ளான். (7)

அல்லைமருங்குழன்மடவா ரனங்கனென மடலெழுது
மல்லைமரு வடிவழகன் வந்தடுத்தோர் தமக்குதவு
செல்லைமருந் தனபதியான் றிகழ்குமர சாமியெனுஞ்
சொல்லைமருந் திருப்பெயர்கொள் சுகுணன்விழை வொடு
[கேட்ப. (8)

இதுநமது பெருமான்ற னின்னருளென் றேமெனவே
புதுவையாஞ் சேர்தமிழாற் புலவர்பலருஞ் செவிவிருந்தாய்க்
குதூகலமோ டருந்திடுவான் சு[illegible]னனென் றேன்பெயரை
மதிமிகுந்த நமரங்காள் வழங்கிடுவ னனிகேண்மோ. (9)

திரைமணக்குங் கடனீரைச் சேரவுண்ட முனிவிழைய
நிரைமணக்கு மெந்நூலு நியமமொடுகற் றுணர்ந்தோன்
வரைமணக்கு முருகேசன் மலரடிக்கன் பியறவத்தோன்
தரைமணக்கு மாறுமுக தயாநிதிமுத் தமிழ்வலனே. (10)

இத்தகைய தமிழ்மாலை யிப்பரெங்கு முலவிடவே
சுத்தமுறு மச்சேற்றித் தொண்டர்தமக் கீந்தனனு[வோன்
னித்தமுந்தன் மனைவியொடு நிகழ்த்தருமபல் லறம்புரி
சத்தமரு நெஞ்சமுளான் சங்கிலிப்பேர் சற்குணனே. (11)

மு. தா. வாழவந்தியிலிருக்கும்

அ. மாணிக்கம்பிள்ளையவர்கள்

இயற்றியவை.

வான்மணக்கு மாடமலி முசிரியில்வாழ் விசுவேசர் மலர்ப்பூந்தாட்குத், தேன்மணக்குந் தமிழ்மாலை யறிஞர்மனங் களிதுளும்பச செய்தணிந்தான், மான்மணக்குந் திருக்கரங்கொள் வரன்மகனெனுங் குகன்பதத்தை வழுத்துநெஞ்சன், கான்மணக்குங் குவளையந்தா ரணியாறு முகப்பெயர்கொள் கவிஞன்றானே. (1)

எங்கயமு மன்னியவிம் மாலையினை யச்சிலிட்டிங் கிசையையேற்றான், பன்னருநற் குணமுடையான் மருதபிள்ளை சுவச்சன்மன் பரித்துவந்தோர்க், கன்னமொடு சொன்னமதை யார்வமொடு தந்தளிப்போ னவனிதன்னிற், கன்னனைநேர் கொடையாளன் சங்கிலியாபிள்ளையெனுங் காமன்றானே. (2)

சென்னைநகர்ப் பண்டிதை

மாதுஸ்ரீ. மனோன்மணியம்மாள்

இயற்றியது.

வாங்ககிலாத் தனவான்கண் மலிமுசிரிவிசுவேசர் மனம்வியக்கும், பாங்கமைந்த தொடைபொருட்சொலழகணியா தியமருவும் பாக்கடம்மா, லோங்கியமாலைப்பனுவலுஞற்றிட்டா னுயர்வாசக் குவளைமாலைத், தாங்கியவிற் பனருகுமாறுமுகப் பாவலனுஞ் சதுரன்றானே.

சாத்துகவிகள்

(முற்றிற்று)



உ

சிவமயம்.

முசிரி

விசுவேசர்மாலை

காப்பு

வெண்பா.

வாக்கருளுஞ் செந்நெல் வயல்சுலவுந் தென்முசிரிக்
காக்க வரும்விசுவக் கண்ணுதன்மேற்—பாக்களினற்
பூமாரி போல பொழியத் தமிழ்மாரி
காமாரி யீன்ற களிறு

அறுமுகக்கடவுள்

பொற்புடைய விடையினனைப் பொன்னிமயப்பிடியதனைப்
புலவனீன்ற, கற்புடைய யானையினை கானகத்தின் குறமா
னைக் காமைந்தானை, யற்புடைய தந்தைதாய் மனைவிகடன்
றமயனென வமைந்துளானை, வெற்புடைய வேல்வாங்கி
விடுத்தவறு முகத்தானை மேவிவாழ்வாம.

நூல்.

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

சீர்மலி கங்கை தும்பையு மறுகுந்
திங்களு மிலங்குசெஞ் சடையு
மேர்மலி கலையை மழுவுடன் பரித்த
வெழிற்கர முங்கொணி னுருவைக்
கார்மலி யிமய வல்லியோ டெளியேன்
காணவுங் காட்சிதந் தருள்வாய்
நீர்மலி பொன்னி சூழ்திரு முசிரி
நிமலனே விசுவநா யகனே

விடியுமுன் பெழுந்து குடைஞையிற் படிந்து
வெண்டிரு நீற்றினை யணிந்து
கடிமல ரம்புங் கரந்தலை தாங்கிக்
கவின்றரு மாலயம் புகுந்து

முடியினிற் சொரிந்துன் னடியினிற் பனுவன்
மொழிந்திடு மாறருள் புரிவாய்
படிமிசைச் செந்நெற் றடிகள்சூழ் முசிரிப்
பதியமர் விசுவநா யகனே (2)

அலருறை பவனு மஞுருறை பவனு
மாகிய நாயடி யேற்கு
மலருறை பவனுங் கடலுறை பவனு
மறைகளு மின்னமுங் காணாப்
பிலருறை முடியுங் கழலுறை யடியும்
பிறங்கிடக் காட்டுநா ளுளதோ
பலருறை மாட மேவிடு முசிரிப்
பதிவளர் விசுவநா யகனே (3)

நந்தன மலரை மந்தண மறையை
நவின்றுன தடியினிற் சூட்டி
வந்தன மெனவே யிருகரங் கூப்பி
வலம்புரி தருநிட லன்றி
யெந்தனங் கவரும் பந்தன முலையா
ரெழினலம் விரும்பியிவ் வுடலை
யிந்தனத் திடவோ வளர்த்தினேன் முசிரி
யெந்தையே விசுவநா யகனே (4)

வெண்டிரு நீறுங் கண்டிகைக் கலனும்
விழைந்துள நின்னடி யவர்கண்
முண்டித முடியைக் கண்டடி தொழவு
முத்தமிழ் கொண்டுநின் புகழைத்
தெண்டிரை ஞாலத் தெண்டிசை தனிலுஞு
செப்பவு மெனக்கருள் புரிவாய்
வண்டிமிர் சோலை யண்டிடு முசிரி
மருவிய விசுவநா யகனே (5)

அல்லெனுங் குழலும் வில்லெனு நுதலு
மம்புய முகமுங்கொண் மடவார்
வல்லெனு முலையல் குல்லெனும் வலையில்
வதிதரன் மாற்றினா யடியேன்
கல்லெனு மனதை யொல்லென விழுதாக்
கரைத்துன தடிதொழ வருளாய்
செல்லெனு மொலிசேர் கழனிசூழ் முசிரி
தேவனே விசுவநா யகனே. (6)

கூடிலே னினது மெய்யடி யாரைக்
குறுகிலே னின்றிருத் தளியைப்
பாடிலேன் றமிழா னின்பெரும புகழைப்
பரவிநின் றிருகரங் கூப்பி
யாடிலேன் வீணே யவம்புரிந் தொழிந்தே
னந்தகன் வந்திடி லெங்ஙனு
னோடியா னொளிப்பே னுரைத்திடாய் முசிரி
யூரமர் விசுவநா யகனே (7)

தந்தையைக் கொன்ற மைந்தனுங் கொடிய
தகையழிந் தந்தணன் றனையை
விந்தையென் றுரைக்கச சிந்தைமன் களிக்க
மெய்யுறப் புணர்ந்தபா தகத்தை
நிந்தையின் பா[illegible] ச[illegible]டலின் முன்னர்
நீக்கிய[illegible] நலியுணர்ந தடைந்த
வெந்தாவை வினையைத் [illegible]தருண் முசிரி
[illegible] விசுவநா யகனே (8)

சாக்கிய [illegible] வழி பெற்றாக
தணைவரி [illegible] புகழைக்
தேக்கிய பனுவ[illegible] புகன்று
தினந் [illegible] யாம்
பூக்களை யனது முடிமிசைப் பொருத்துப்
போற்றிமெய் புளகுகித கிடுமப்
பாக்கிய மதனைத் தந்தருண் முசிரிப்
பதியமர் விசுவநா யகனே (9)

கண்டெனு மொழியும் வண்டெனும் விழியுங்
கதலிநற் றண்டெனுந் துடையுஞ்
செண்டெனு முலையுங் கொண்டிடு மகளிர்ச்
சேருதல் பயனென விழைந்துன்
றொண்டெனுந் தொழிலை யண்டிடா தொழிந்த
துகளினேன் பவப்பிணி யறுமோ
குண்டெனும பரிகண் மலிதிரு முசிரிக்
கோயில்வாழ் விசுவநா யகனே (10)

வாதுக ளுஞற்றி ஞாதியர் கவர்ந்த
வான்பொருண் மீட்டிட வணிகத்
தாதக லாத கோதைதன் சுதற்குத்
தனபதி பெயர்கொடு வந்த

மாதுல வின்றே தீதுசெய் தென்னை
மருவிய வறுமையை யொழிக்கப்
போதுத லன்றோ நீதிகாண் முசிரிப்
புனிதனே விசுவநா யகனே (11)

பொருண்முடி பறித்த வருண்மொழித் தேவர்
புகன்றிட முதலெடுத் துதவி
யிருணிறைந் துள்ள மருளினேன் றமிழ்ப்பா
விசைத்திட வருளினை யென்னி
லருணிறைந் துள்ள பெருமநின் றனக்கிங்
கடாதெனப் புகல்பவ ரெவரோ
மருளகன் றொளிரு முனிவர்வாழ் முசிரி
மருவிய விசுவநா யகனே (12)

இழிபுக ழமண ரொழிவுற மதுரைக்
கேகிய கரிதனை யன்று
கழிதரக் குருகி யிழிதர வரியாங்
கணைதொடுத் தட்டனீ யெனது
மொழிதர வரிய பழிசெயுங் கொடிய
முரணுடை மலமெனுங் கரியை
யழிதரச் செய்வ தரிதுகொன் முசிரி
யத்தனே விசுவநா யகனே (13)

நீரொலிக் கடலைத் தோணியாற் கடக்கு
நெறியென நின்றிரு நாம
பார்மொழி பஞ்சாக் கரப்புணை பற்றிப்
பவக்கட னீந்துவ ருலகர்
கூர்விழி மங்கை வார்கிழி கொங்கைக்
குடமதைத் துணையென மதித்தேன்
வார்மலி பிறவி கடப்பனோ முசிரி
மருவிய விசுவநா யகனே (14)

வருந்துறு மேனக் குருந்துக ளருந்த
மாமுலை சுமந்தனை வடிவாய்ப்
பரந்தொளிர் மதுரைப் பெருந்துட வையினிற்
பால்கொடுத் தனையது போல
விருந்துயர்ப் பிணியே பொருந்துறு மடியே
னிடைவிடா திருந்தருள் பருக
மருந்தென வருவாய் திருந்திய முசிரி
மருவிய விசுவநா யகனே (15)

நாகநா டுடைய பாகசா தனற்கு
நவிதரு பழியையுஞ் சுவேத
தேகமாங் கரியின் மாகத முனிவன்
செப்பிடுஞ் சாபமுந் தொலைத்தாய்
யோகமாம் பிறவிச சாகர மதனை
முனிந்துன தருளினை யெனக்கிங்
கேகலா திருத்த லாகுமோ முசிறி
யெந்தையே விசுவநா யகனே (16)

தெருவிடை மறையோன் பெருநடைப் பரியாற்
சிதையச்செய் வரகுணன் பழியைத்
திருவிடை மருதிற் பொருவிடை யிவருஞ்
செல்வநீ தீர்த்தனை யென்றுற்
கருவிடை வருந்து முருவுறச் செயுமென்
கன்மத்தைத் தொலைப்பது மரிதோ
குருவிடை மாந்தர் தெளிவடை முசிறிக்
கோயில்வாழ் விசுவநா யகனே (17)

என்னிரு கரமுஞ் சென்னியிற் குவித்தே
யெழுந்துன தாலய மடைந்து
முன்னிருந் தடியேன் பன்னிய பனுவன்
மொழிந்திடு மாறருள் புரிவாய்
சென்னியி னதியுந் துன்னிய மதியுந்
திகழ்வுற விளங்கிடுந் தேவே
பொன்னியன் மாட மன்னிய முசிறிப்
பொருந்திய விசுவநா யகனே (18)

கிஞ்சுக மொழியார் தஞ்சுக வழியிற்
கெட்டலைந் துழனுமிக் கொடிய
வஞ்சக முடைய நெஞ்சினேன் றனது
மலம்பெறு நெருப்பிடைப் பட்ட
பஞ்செனத் துமிய நின்னுள மிரங்கிப்
பார்த்தருள் புரிகுவா யரவி
னஞ்சுகந் தரத்தில் வைத்திடு முசிறி
நாதனே விசுவநா யகனே (19)

மாடக நிறைந்த கூடலம் பதியின்
மணிவளை கரத்தினி லேந்தி
வீடகந் தோறு நாடகம் பயின்ற
வித்தக விமலனீ யலையோ
தேடகம் வாய்ந்த சிறியன்முன் குறுகித்
தீவினை யகற்றுத லரிதோ

வாடக மலைநேர் மாடமார் முசிறி
யமர்ந்தொளிர் விசுவநா யகனே (20)

புன்னிய மங்கொண் முன்னவள் கடுஞ்சொற்
புகன்றிடப் பின்னவ டனக்கு
வன்னியுங் கிணறு மின்னிய லுருவு
மதுரையி லழைத்தனை யன்றே
வென்னிரு வினையு மன்னிய மலமு
மிரிதரச் செய்வது மரிதோ
சென்னியின் மதிசேர் மாடமார் முசிறித்
தேவனே விசுவநா யகனே (21)

அங்கவீ னங்க டங்கிய லோப
மடைந்துள மூடரை யடுத்துச்
செங்கைவே லுடையாய் பங்கயத் தன்பன்
றிறவனே யெனச்சொலா திமய
மங்கையோ டமர்ந்த வெங்கணா யகவுன்
வண்புகழ் வழுத்துமா றருளாய்
சங்கையின் முனிவர் மகமபுரி முசிறித்
தாணுவே விசுவநா யகனே (22)

பல்வினை முயன்று புல்லிய செல்வம்
பரித்துள மாந்தர்போ லடுது
நல்வினை யோர்ந்து கல்வியிற் றேர்ந்து
நன்னெறி யொழுகுமெய் யடியார்
சொல்வினை கடியாச செல்வம தளித்துச
சொல்லரு நின்பதம் வழங்காய்
வல்வினை யகன்ற முனிவர்சூழ் முசிறி
மருவிய விசுவநா யகனே (23)

மண்டிய பசிநோய் கொண்டிடுங் குறட்கு
மதுரையின் வையையி னீருந்
தெண்டிரை ஞாலத்துண்டிடச் சோறுந்
செறிதரக் கொடுத்தனை யெனின்யா
னுண்டிட வறுமை யண்டிடா துதவ
வோதவும் வேண்டுமோ நினக்கே
பண்டிதர் பாக்க ளண்டிடு முசிறிப்
பதியமர் விசுவநா யகனே (24)

மாதவர் போற்றும் வாதவூ ரடிகள்
வாங்கிய கடனற மாறன்
றீதவ மாக வோதரும் பரிகள்
செலுத்தினை தொழும்பனே னளியாற்

சித்தவா றையு முகவள்ளற கடனைத்
தீர்த்திடப் பறிதரா தென்னை
பாதவ மதியை மோதுறு முசிறிப
பதியமர் விசுவநா யகனே (25)

ஆடடியோக் கண்டின் றூட்டுணை யுலகோ
ரடைந்திடத் தில்லையி னடனம்
வெட்டுளா யடியேன் வாடுறும பழையா
விளைதவிர்த் தாண்புடா னிந்த
நாட்டருங் கொடுமை கேடுனை யாராதா
நகைததிடார் நமபனை யாளவாய
பாட்டளி முரலு சோலைநறு முசிறிப
பதியமர் விசுவநா யகனே (26)

பஙகமின் மதுரை தஙகிவாழ விஞசை
பயிற்றுவோன் பருவா லகற
செஙகையின் வலியான் மஙலை [illegible] கரத்தைத
தீண்டி [illegible]
னங்கம தீர்ந்த [illegible]
[illegible] ன்னே
சங்கர [illegible]
தவி [illegible] (27)

பாவலர் பு [illegible] நாவலூரர்ப் புலவன்
பரவைதன் புலவி தீர்த்தருள [illegible]
வாவலோ டிரைதத வேவல [illegible]
ரணிமறு கிரவினிற [illegible]
போவது குறித்த தேவனே யென்பாற
பூமக ளருள விழி நோக்க
மேவுறச செய்வ தரிதுகொன் முசிறி
விமலனே விசுவநா யகனே (28)

இத்தரை மதியாப் புத்தரை வாதி
லிசைபெற வென்ற சம்பந்த
முத்தனுக் கன்று நித்தில மணியு
முகிழ்முலை யுமையவள் பாலும்
பத்தியாய்க் கொடுத்த நித்தனென் றுனது
பாலடுத்திடு மெனக் கருளாய்
சித்தர்க ளுறு மொய்த்துவாழ முசிறி
தேவனே விசுவநாயகனே (29)

பாவியேன் முன்னர் தாவுநல் விடையிற்
பனிமலை நனிமகிழ்ந் தின்ற

வோவிய மன்ன காவியங் கண்ணா
ளுடனெழுந் தருளியுன் னடிமை
மேவிய வெனது தீவினை யகற்றி
வினவிய நலவரந் தருவாய்
வாவியங் கழனிசூழ் திருமுசிறி
மருவிய விசுவநா யகனே (30)

துடிபருண் மருங்குற் றுணைமுலைக் கிடையுந்
தோகையா தருபெரு பயலைக்
கடியுநன் மனத்தோர்க் கருளமைவீ டென்று
கழறிய நீயுருசுந் தரர்க்காய்
தொடியணி பரவை யடலைத் தூதிப்பான்
றாதின்மே வியதிறமு மதே
படிநினைப் புகழு மென்னையாண் முசிறிப
பதியவா விசுவநா யகனே (31)

விடைக்கொடி பரித்த விமலவென் மனந்தான்
வேதனை பலகொண்டு சயியா
தடைக்கல மென்ன நின்னடி யடுத்தே
னப்பனே யென்னையுன் றூய
கடைக்கணே நோக்கிக் காப்பதுன் கடனே
கருணையா யகடலே நறுகழனி
மடைக்கணுண் வாளை பாயுநன் வடமுசிறி
மருவிய விசுவநா யகனே (32)

விசுவேசர்மாலை.
(முற்றிற்று)

உ

தேவிசகாயம்.

முசிறி

விசாலாட்சியம்மை பதிகம்.

காப்பு.

திங்கடவழ மணிமாடஞ் செறிந்திடுபொன் முசிரியில்வாழ்
துங்கவிசு வேசரிடந் துலங்குவிசா லாட்சியின்மேல்
பொங்கெழில்கொ டமிழ்ப்பதிகம் புகன்றணிய புலவர்
[புகழ்
மங்களவி நாயகன்றன் மலர்ப்பதத்தை வழுத்துகிற்பாம்.

நூல்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

ஏரமர் நின்ற னடிமலரச் சூட்டுஞ்
செழுந்தமிழ்ப் பதிகமுஞ் செழிக்க
வாரமலி யருளவாக் கினிதுற நின்ற
விருதயந் தன்னிலே நினைக்க
ஈரமலி கருணை விழியது சுரக்க
நின்னையான் றுதித்தன னருள்வா
யாரமலி பொழிலவிண் ணளக்குறு முசிறி
யமர்விசா லாட்சியம பிகையே (1)

சனவிலும் வருசங் காட்டிடும் பாவிக்
கசடனீ நினக்குநம மருளைத்
தனமெனுந் தருவ தொண்ணுமோ வென
சாற்றிடற பரனெடும போந்து
சுனகன்போற் றூயைப் புணர்ந்த பாவிக்கு
தொன்மையி லருளினை யென்றே
யனவரதமு மித்துரை சொலு முசிறி
யமாவிசா லாட்சியம பிகையே (2)

காசினி யதனிற் பெற்றகான் முளைக்குக்
கனிந்து பாலளிப்பர்க ளந்த
மாசிலாச செய்கைக ளியைய சம்பந்த
வள்ளலுக கின்றிரு முலைப்பா
லேசிடா தளித்தா யுலகெலா மறியு
மெனக்குப்பா றந்துகாத் திடினே
யாசறுஞ் சீர்த்தி நினக்குறு முசிறி
யமர்விசா லாட்சியம பிகையே (3)

கழிகொளுந் தவத்து மிருகண்ட முனிவன்
கான்முளைக் காவுயா மூன்று
விழிகொளு முனது கொழுநனு முன்பு
மெய்க்கெதிர் மறையினை விண்டு
சுழிகொளுங் காலற் காய்ந்தவர்ப் புரந்தான்
சுரும்பமர் கரும்பேயிவ் வெளியே
னழிகொளு முன்ன ராளியெலன் முசிறி
யமர்விசா லாட்சியம் பிகையே (4)

நஞ்சினுங் கொடியேன் முனம்வர வித்த
நானிலந் தன்னிலஞ் சுழினே

யெஞ்சலில் வலியார் நின்கண வனொடு
　　மிணையிலா நின்மகா ரொடும்
வஞ்சக மில்லா மயிலேநின் றனக்கு
　　வருகவும் பஞ்சமோ வழங்கா
யஞ்சுகம் பூவை மறையுரை முசிறி
　　யமர்விசா லாட்சியம் பிகையே (5)

உட்டெளி வுடைய புலவர்கள் புகழு
　　மொப்பிலாப் புகழபி ராமப்
பட்டரின் பொருட்டன் றமையைப் பூரணையாய்ப்
　　பருமணிக் குழையைவிண் மீது
விட்டுடன் புரந்த விமலையே யுன்றன்
　　மிளிர்புகழ்ப் பாடுகேன் றனையா
ளட்டதிக் கினரு நட்டடை முசிறி
　　யமர்விசா லாட்சியம் பிகையே (6)

பூவுடன் மணமும் போன்றவா றுயிர்கட்
　　பொருந்திய பூரணி யுனது
மேவுநல் லுருவைக் காண்டிட வெனக்குன்
　　மெய்யரு ளென்றுவாய்த் திடுமோ
காவின்மூப் புரிநூ லணியும்பூ சுரர்கள்
　　கழறுமைந் திட்டிசெய் புகையி
ஞவிவிண் சுரரை யழைத்திடு முசிறி
　　யமர்விசா லாட்சியம் பிகையே (7)

மின்னனே ரிடைகொள் பொன்னனை யாடன்
　　மிளிர்நகக் குறிபரி கன்ன
மன்னவன் விழையு மன்னமே யுன்றன்
　　மைந்தனு மென்மன வழுக்கை
யுன்னருட் புனலாற் கழுவியே யருளா
　　யுத்தம வருந்ததி நிகர்க்கு
மன்னலா ரமர்மேன் மாடமார் முசிறி
　　யமர்விசா லாட்சியம் பிகையே (8)

வேண்டுவார் வேண்டும் படியருள் புரியும்
　　வித்தகி முனம்வர குணனும்
பாண்டியன் விழைந்த படிசிவ லோகம்
　　பார்த்திடப் பணித்தனன் பத்தா
வீண்டுநின் னுடைய காட்சியைக் காட்டி
　　லெனக்கது போதுமால் கூவு

மாண்டலை துவசத் தமலன்வாழ் முசிரி
யமர்விசா லாட்சியம் பிகையே (9)

வணங்குமெய் யடியார் குறிப்பறிந் தன்று
மாய்ந்தவென் பிளைப் பெண்ணைய்ப் புரிந்துங்
குணங்கெழும் பொன்னைய்ச் செங்கலைப் புரிந்துங்
குரவையிற் கன்மிதப் பித்து
மிணங்கிய வருளைப் புரிந்தனன் பாம
னென்குறிப் பதனைநீ யறிந்து
மணங்கிய குழலா யருளினென் முசிரி
யமர்விசா லாட்சியம் பிகையே (10)

விசாலாட்சியம்மை பதிகம்.
முற்றிற்று.

வேலுமயிலுந் துணை.

முசிரி

ஆறுமுகக்கடவுள் பதிகம்.

காப்பு.

கொச்சகக்கலிப்பா.

விண்வளரு மிந்திரனும் விழைவளஞ்சான் முசிரியிலெங்
கண்வளரு மாறுமுகக் கடவுளின்மேற் பத்தியுடன்
பண்வளருந் தமிழ்ப்பதிகம் பாடிடப்பாண் டவர்சரிதை
மண்வளரு மேருவரை வரைந்தகளிற் றடிமணப்பாம்

நூல்.

காசினியி னின்னுடைய காலடியைத் தோளமைத்திங்
காசையொடு முருககுக வப்பசுப் பய்யவெனக்
கூசிடாதுன் புகழைக் கூறவருள் விண்ணணவு
மாசின்மணித் தளிமுசிரி வளராறு முகத்தேவே (1)

செச்சையணி முலையாற்பாற் சென்றவென் றன் மனவன்ன
மிச்சையொடுன் னடிமலரி லிறைகொளு நாளெந்நாளோ
பச்சைமான் மருகவுரை பழங்கணடைந் தவர்க்குதவா
வச்சையரில் லாமுசிரி வளராறு முகத்தேவே (2)

சிறப்பெல்லாந் தந்தருளச் சேந்தநீ யிருந்துமிந்தப்
பிறப்பினாற் பெரும்பயனைப் பிள்ளையேற் கருளாமற்

குறப்பெண்ணொடு மிகுமகிழ்வாய்க் கூடிவிளை யாடுதலின்
மறப்பதுநன் றோமுசிறி வளராறு முகத்தேவே (3)

பாடுகென நீயுரைத்தும் பாடாப்பேய் யாமொழிசூ தசு
சூடுமிகு பாலையினிற் றெருவலுருவைக் காட்டினையா ய
விடுதவு நினைவலிய மெய்த்தமிழாற் பாடுமென்றன்
மாடுவரா தென்முசிறி வளராறு முகத்தேவே (4)

மங்கையர்பால் மாழ்ந்து வருந்திமணிச் சிகரியினிற்
றங்கிவிழு மருணகிரி தனையாண்ட தண்ணளியா
யிங்குனையே பரமென்ன வெண்ணிநிவேற் கருள்செயினென்
வங்கம்வளரு செறிமுசிறி வளராறு முகத்தேவே (5)

இத்தரையி லெத்தனையோ வியற்பாவா லென்குறையை
நித்தமுநா னிகழ்த்தியுமுன் னெஞ்சம திரங்கிலையென்
புத்தரையும புரந்தவையா புரித்துரையீ தழகன்றுன்
மத்தர்களும் பணிமுசிறி வளராறு முகத்தேவே (6)

கல்லாரும் வணங்கிலருள் களிநதருள்கர்ப் பூரவல்லி
நல்லாளின் மகுசனென்று நானடைந்தே னீயுமெனை
செல்லாநல் லிசையடியார் சேரவையிற் சேர்த்திடுவாய்
மல்லாரும் பணைமுசிறி வளராறு முகத்தேவே (7)

உலையிலிட்ட மெழுகெனநா னுளநைந்து வருந்திடலை
கலையுணரும் புலவநீயுங் கருதாதே னீயிறைகொண்
மலையெனவே நின்னுடைய மனமுங்கல லானதுவோ
வலையருளைப் புரிமுசிறி வளராறு முகத்தேவே (8)

உரைக்கருமைம் புலமறவ ரொருவனு மெனைவருத்த
பரைக்கருமைப் பாலவின்னும் பார்த்துவரத் தாமதமென்
றரைக்கண்வள்ளி மான்றேடிசார்ந்துவலுக கையோசாற்
[றாய்
வரைக்கண் ணமர்துரைமுசிறி வளராறு முகத்தேவே (9)

அந்தகன்வந் தென்னைதிரிலதட்டிவரு மந்நேரஞ
சுந்தரஞ்சேர் மயின்மீது தோன்றியேவந் தருள்புரிவாய்
கந்தவே ளேசிலம்பா காங்கேயா வெனவடியார்
வந்துவலம் புரிமுசிறி வளராறு முகத்தேவே (10)

ஆறுமுகக்கடவுள் பதிகம்
முற்றிற்று.